# 6

# மெசியா பற்றிய இறைவாக்குகள்



6.1 ஆதாம் ஏவாள்

ஆதாம் ஏவாள் எமது ஆதிப்பெற்றோர். அவர்கள் இறைவனுக்குக் கீழ்படியாமல் போனார்கள். எனவே ஏதேன் தோட்டத்திலிருந்து துரத்தப்பட்டார்கள். தமது தவறுகளினாலும், தமது சுய விருப்பத்தினாலும் பாவத்தில் விழுந்த அவர்களை இறைவன் அன்பு செய்தார். இழந்துபோன முடிவில்லா வாழ்வை மீண்டும் பெற்றுக் கொடுப்பதற்கு மீட்பரை அனுப்புவதாக இறைவன் வாக்குறுதி அளித்தார்.

## ஆபிரகாமின் அழைப்பு

உலகின் மீட்பராகிய இயேசுவை இவ்வுலகிற்கு அனுப்பும் பொருட்டு, மீட்பின் வரலாற்றை ஆயத்தம் செய்வதற்காக இறைவன் ஆபிரகாமை அழைத்தார்.

ஆண்டவர் ஆபிராமை நோக்கி “உன் நாட்டிலிருந்தும் உன் இனத்தவரிடமிருந்தும் உன் தந்தை வீட்டிலிருந்து புறப்பட்டு நான் உனக்குக் காண்பிக்கும் நாட்டிற்குச் செல். உன்னை நான் பெரிய இனமாக்குவேன். உனக்கு ஆசி வழங்குவேன். உன் பெயரை நான் சிறப்புறச் செய்வேன். நீயே ஆசியாக விளங்குவாய். உனக்கு ஆசி கூறுவோர்க்கு நான் ஆசி வழங்குவேன். உன்னை சபிப்போரை நானும் சபிப்பேன், உன் வழியாக மண்ணுலகின் மக்களினங்கள் அனைத்தும் ஆசிபெறும்” என்றார்.

தொ. நூ 12 : 1 - 3)

இவ்வழைப்பிற்குப் பதில் கொடுத்த ஆபிரகாம் இறைவன் கூறியபடியே வாக்களிக்கப்பட்ட நாட்டிற்கு புறப்பட்டார். இது அவர் இறைவன்மேல் கொண்ட அளவில்லா நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது.

ஆண்டவர் ஆபிராமுக்குக் கூறியப்படியே அவர் புறப்பட்டுச் சென்றார். அவருடன் லோத்துவும் சென்றார். ஆபிராம் ஆரானை விட்டுச் சென்றபொழுது அவருக்கு வயது எழுபத்தைந்து, ஆபிராம் தன் மனைவி சாராயையும், தன் சகோதரன் லோத்தையும் உடனழைத்துச் சென்றார். அவர்கள் ஆரானில் சேர்த்திருந்த செல்வத்துடனும், வைத்திருந்த ஆள்களுடனும் கானான் நாட்டிற்குப் புறப்பட்டுச் சென்று அந்நாட்டைச் சென்றடைந்தனர். ஆபிராம் அந்நாட்டில் நுழைந்து செக்கேமில்இருந்த மோரேயின் கருவாலி மரத்தை அடைந்தார். அப்போது கானானியர் அந்நாட்டில் வாழ்ந்து வந்தனர்.

(தொ.நூ 12 : 4 - 6)

## மெசியாவைப் பற்றிய இறைவாக்குகள்

இறைவன் தமக்கென ஒரு இனத்தைத் தெரிந்தெடுத்து அந்த இனத்திலிருந்து இவ்வுலகில் மீட்பரை பிறக்கச் செய்யவே ஆபிரகாமைத் தெரிந்தெடுத்தார். ஆபிரகாமின் வழிமரபினரே யூத இனத்தவர். அவ்வினத்தின் மேன்மை மிக்க அரசர் தாவீது, தாவீது அரசரின் பரம்பரையிலிருந்து உலக மீட்பர் தோன்றுவார் என்று இறைவாக்கினர்

நாத்தான் தாவீது அரசருக்கு அறிவித்ததை கீழ்க்காணும் வசனங்கள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

''உன் வாழ்நாள்கள் நிறைவுபெற்று நீ உன் மூதாதையரோடு துயில் கொள்ளும்போது, உனக்குப் பிறக்கும் உன் வழித்தோன்றலை உனக்குப் பின் நான் உயர்த்தி, அவனது அரசை நான் நிலைநாட்டுவேன்... என் முன்பாக உனது குடும்பமும், உனது அரசும் என்றும் உறுதியாயிருக்கும். உனது அரியணை என்றுமே நிலைத்திருக்கும்.''

(2 சாமுவேல் 7 : 12 - 16)

கிறிஸ்து எமது அரசர். அவரது அரசு என்றென்றும் நிலைத்திருக்கும்.

இயேசு ஒரு கன்னிகையிடமிருந்து பிறப்பாரென்பதை கீழ்க் காணும் இறைவாக்கு எடுத்துரைக்கின்றது.

ஆதலால் ஆண்டவர் தாமே உங்களுக்கு ஓர் அடையாளத்தை அருளுவார். இதோ, கருவுற்றிருக்கும் அந்த இளம்பெண் ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பார். அக்குழந்தைக்கு அவர் ''இம்மானுவேல்'' என்று பெயரிடுவார்.

(எசாயா 7 : 14)

அந்த இளம்பெண் மரியா. அக்குழந்தைக்கு இம்மானுவேல் என்ற பெயர் வழங்கப்படும். ''கடவுள் நம்மோடு'' என்பதே அப்பெயரின் அர்த்தம். இயேசு இறைமகன் என்பதால், அவரது பிறப்பின் வழியாக இறைவன் எம்மோடு தங்க வந்துள்ளார்.

*நீயோ எப்ராத்தா எனப்படும் பெத்லகேமே! யூதாவின் குடும்பங்களுள் மிகச் சிறியதாய் இருக்கின்றாய்! ஆயினும், இஸ்ரயேலை என் சார்பாக ஆளப்போகின்றவர் உன்னிடமிருந்தே தோன்றுவார். அவர் தோன்றும் வழிமரபோ ஊழி ஊழிக் காலமாய் உள்ளதாகும். அவரே அமைதியை அருள்வார்.*

(மீக் 5 : 2 - 5)

இந்த வேதாகமப் பகுதியினூடாக இயேசு என்னும் மெசியா, சமாதானத்தின் இறைவன் பெத்லேகேமில் பிறப்பார். இவர் அமைதியின் புதல்வன் என அழைக்கப்படுவார். இழந்துபோன இறை உறவை அவர் மீண்டும் கட்டியெழுப்பி அமைதியை அருள்வார் என்பது வெளிப்படுத்தப்படுகிறது.

இறைவனின் மீட்புத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அழைப்புப் பெற்றவர்கள் இறைவனின் குரலுக்கு செவிமடுத்துக் கீழ்ப்படிந்தார்கள் நாமும் இறைத்திட்டத்திற்குக் கீழ்ப்படிபவர்களாய் வாழ வேண்டும். இறைவன் எம்மையும் பல்வேறு சூழ்நிலைகளிலிருந்து, பல்வேறு சேவைகளுக்காக அழைக்கிறார். இறைவனின் மீட்புத் திட்டத்தை நம்பிக்கையுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும். இறைவார்த்தை வழியாக எமக்கும் இறைவனின் திட்டம் வெளிப்படுத்தப்படுகிறது. இதனால் எல்லாருக்கும் இறைவனுடைய மீட்புத் திட்டம் உரிமையாகிறது.

## செயற்பாடு

1. மெசியாவைப் பற்றி இறைவாக்கினர் முன்வைத்த இறைவாக்குகள் மூன்றைக் குறிப்பிடுக.

2. இறைத்திட்டத்துக்குக் கீழ்படிய நீர் செய்யக் கூடிய மூன்று செயற்பாடுகளை எழுதுக.

3. கீழ்க்காணும் பலவித சேவைகளுக்காக இறைபிள்ளையாகிய உமக்கு அழைப்புக் கிடைத்தால் அவ்வாறான சந்தர்ப்பங்களில், எவ்வாறு செயற்படுவீர்?

i. வகுப்புத் தலைவனாக நியமனம் பெறும்போது

ii. பாடசாலை மட்டத்தில் திருப்பலி ஏற்பாடு செய்யும்போது

iii. பாடசாலை விளையாட்டுப் போட்டித் தலைவராக நியமனம் பெறும்போது

iv. பங்கில் சிரமதானத்தில் பங்குபெறும்போது

## வாழ்க்கைக்கு

- இறைகுரலுக்குக் கீழ்படிவோம்.
- வழங்கப்பட்ட வேலைகளை பொறுப்புடனும் உற்சாகத்துடனும் செயற்படுத்துவோம்.
- இறைபிள்ளைகளாக செயற்பட்டு திருச்சபையை வளர்ப்போம்.